பிரபஞ்ச உற்பத்தி



சுவாமி பிரபஞ்சநாதன்

ஸ்ரீ குருப்யோ நம:

பிரபஞ்ச உற்பத்தி



விளக்கம்:-

சுவாமி பிரபஞ்சநாதன்

ஓம் ஸ்ரீ குருப்யோ நமஹ

பிரபஞ்ச உற்பத்தி

இரண்டு என்பதில்லாமல் ஏகபரிபூரண ஞான சொரூபியாய் விளங்கும் சாட்சாத் பரப்பிரம்மத்தினிடத்தில் (கானலில் நீர்போல்) கற்பிதமாகத் தோன்றிய இந்த உலகமும், உயிர்களும் மூன்று குணங்களுடன் கூடி பிரதிபிம்பமாக வெளிப்பட்டதை, அறியாமையினால் அந்த பிரம்மத்திற்கு வேறானதாகக் கருதி, அந்த தவறான கருத்தின் ஆழத்தில் சிக்கிக்கொண்ட ஜீவர்களின் சந்தேகங்களை நீக்கும் பொருட்டு, வேதாந்த நூல்களில் அத்தியாரோப யுக்தியும், அபவாத யுக்தியும் கூறப்பட்டுள்ளன.

அவற்றின் கருத்து, கானலில் கற்பிதமாகத் தோன்றும் நீரை எவ்வாறு உண்மை போல நம்புகின்றோமோ, அதுப்போல, இந்த உலகத்தின் தோற்றத்தை உண்மையென்று நம்பி உருவமும், பெயர்களும் கற்பிக்கப்பட்டுள்ளன.

இப்படி கற்பிக்கப்பட்ட கற்பனையான பிரபஞ்ச சிருஷ்டி வந்தது எவ்வாறெனில், இந்திரஜால வித்தை செய்பவன் தன் மந்திர வித்தையால் காட்டும் காட்சிப்பொருள்கள் போன்று, அந்த வித்தையில் அடங்கி வெளிப்படுவதும், மறைவதும் போன்று, பிரம்ம சக்தியான மூலப்பிரகிருதியில் அனாதி காலமாக வெளிப்படாமல் அவ்வியக்தமாய் அடங்கி இருந்த

பரம ஆதியின் பதார்த்தங்களை அந்தப் பிரம்மம் வெளிப்படுத்த நாடின போது அந்த மூலப்பிரகிருதி என்னும் சக்தியானது சத்துவம், ராஜஸம், தாமஸம் என்னும் மூன்று குணங்களாக வெளிப்பட்டன.

இந்த வெளிப்பாட்டை மற்றொரு விதமாகவும் சொல்வார்கள்.

அதாவது, அவ்வியக்தமான அந்த மூலப்பிரகிருதியே மகத்தத்துவமாய் மகத்தத்வம் அகங்கார தத்வமாய் அகங்கார தத்துவம் மேற் கண்ட முக்குணங்களாய் வெளிப்பட்டன.

இந்த மூன்று குணங்களில் ஏதாவதொரு குணம் மற்ற இரண்டு குணங்களையும் மீறி ஓங்கி நிற்கும்.

முக்குணங்களில் முதற் குணமாகிய சுத்த சத்வ குணத்திற்கு **"மாயை"** என்று பெயர்.

அந்த மாயையிற் பிரதிபலித்த பிரம்மத்தின் சாயலான ஞான நிழலுக்கு **"அந்தரியாமி"** என்றும் மாயாசகித **"ஈஸ்வரன்"** என்றும் பெயர்.

இந்த ஈஸ்வரனுடைய சத்வகுணமே ஆந்த உறக்க நிலையான சுழுத்தி அவஸ்தையும், காரணசரீரமும், ஆனந்த மயகோசம் எனப்படுகின்றது.

(கோசம் என்றால் கவசம் அல்லது மூடுகிற உறை என்பது அர்த்தம்)

அடுத்து, இரண்டாவது குணமாகிய ராஜஸகுணம் அனேக ரூபங்களாய் பிரிந்து அவித்தைகள் என்று ஆனது.

(அவித்தை என்றால் அஞ்ஞானம், அறியாமை எனப்பொருள்).

இந்த அவித்தைகளில் பிரதிபலித்த பிரம்ம நிழலுக்கு **“ஜீவன்”** என்று பெயர்.

இந்த ஜீவனுக்கு இந்த ராஜஸ குணமே காரண சரீரமும், சுழுத்தி அவஸ்தையும் ஆனந்த மயகோசமும் ஆகும். இவ்வாறு, சுழுத்தி அவஸ்தையில் காரண சரீரத்தை அபிமானிக்கின்ற ஜீவன் **“பிராக்ஞன்”** என்னும் பெயரைப் பெறுகின்றது.

இதுவரையில் சத்துவம் ராஜஸம் என்னும் இரண்டு குணங்களாலும் வந்த ஈஸ்வரன், ஜீவர்களின் காரண சரீரம் கற்பிதங்கள் கூறப்பட்டது.

இனி, அடுத்து சூக்ஷும சரீர கற்பிதம் சொல்லப்படும்.

ஜீவர்களுக்குப் போக சாதனம் உண்டாகும் பொருட்டு மாயாசகித வீசனுடைய அனுக்கிரகத்தினாலே மூன்றாங் குணமாகிய தாமத குணமானது ஆவரணம் விக்ஷேபமென இரண்டு சத்திகளாகப் பிரிந்து நின்றது.

ஆவரண மென்பது மறைக்கும் சத்தி, விக்ஷேபமென்பது தோன்றும் சத்தி.

மறைக்கும் சத்தியான ஆவரணம் மாயா சகித ஈஸ்வரனையும் தன்னையறிந்த ஞானிகளையும் தவிர, மற்ற ஜீவர்களை எவ்வாறு மறைக்கும் என்றால், விக்ஷேசேபத்தில் தோன்றிய

ஸ்தூல சரீரங்களையும் சித்துவின் நிழலான ஜீவனையும் **"நான்"** என்று அபிமானிக்கும்படி செய்து, சுயமான, சுத்த சைதன்யமாகிய சாக்ஷாத் பிரம்மமாகவே தான் இருக்கின்றேன் என்ற உண்மையை அந்த ஜீவர்களுக்கு தெரிய விடாமல் மறைக்கும்.

இனி தோன்றும் சக்தியான விக்ஷேபத்திலிருந்து சூக்ஷம ஆகாயமும் அந்த ஆகாயத்திலிருந்து சூக்ஷம வாயுவும், அந்த வாயுவிலிருந்து சூக்ஷம அக்னியும், அந்த அக்னியிலிருந்து சூக்ஷம நீரும், அந்த நீரிலிருந்து சூக்ஷம மண்ணும் தோன்றின.

(“ஆகாசாத் வாயு: வாயோரக்னி: அக்னேராப: அத்ப்ய: ப்ருதிவீ” என்கிறது உபநிஷத்.)

இவ்வைந்தும் **“சூக்ஷ்ம பஞ்சபூதங்கள்”** என்றும், **“பஞ்ச தன்மாத்திரைகள்”** என்றும் பெயர் பெறுகின்றன.

இந்த சூக்ஷம பஞ்சபூதங்களிலிருந்து ஜீவர்களுக்குப் போக சாதனங்கள் உண்டாயின.

அது எப்படி என்றால், மேற்கண்ட மூன்று குணங்களிலும் இந்தச் சூக்ஷும பூதங்கள் ஐந்தும் கூடியிருக்கும் சூக்ஷ்ம பஞ்சபூதங்களின் சத்துவ அம்சத்திலே, பூதத்துக்கு ஒவ்வொரு மாத்திரையாக எடுத்து தனித்தனியே வைத்தது முறையே, காது, மூக்கு, கண்கள், நாக்கு, தோல் என ஐந்து **“ஞானேந்திரியங்கள்”** ஆயின.

காதுகள் சத்தத்தை மட்டும் கேட்கும், மூக்கு மணத்தை மட்டும்

நுகரும், கண்கள் காட்சியை மட்டும் காணும், நாக்கு இரசத்தை மட்டும் சுவைக்கும், தோல் உணர்வு தன்மையினால் பரிசத்தை மட்டும் அறியும். இந்த ஐந்து புறக்கருவிகளும் ஞானேந்திரியங்கள் என்று அழைக்கப்படுகின்றன.

அடுத்து, அந்த பஞ்ச பூதங்களின் சத்துவ அம்சத்திலே பூதத்துக்கு ஒவ்வொரு மாத்திரையாக எடுத்து, அனைத்தையும் ஒன்றாகச் சேர்த்து உள்ளம், மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என ஐந்தும் ஒன்று கூடி **"அந்தக் கரணங்கள்"** ஆயிற்று.

உள்ளம் ஆகாயத்தைப் போன்று அனைத்திற்கும் இடங் கொடுக்கும், மனம் வாயுவைப் போன்று பலவாறாக இங்கும், அங்கும் அலையும். புத்தி அக்கினியைப் போன்று பிரகாசித்து இது இன்னது என்று காட்டிக் கொடுக்கும். சித்தம் நீரைப் போன்று விசயங்களை பற்றி இழுத்துக் கொள்ளும். அகங்காரம் மண்ணைப் போன்று கடினமாக நின்று **"நான்"** என்று அபிமானிக்கும்.

இவ்வாறு, ஐந்து பூதங்களின் தலா ஒரு மாத்திரை வீதம் ஐந்து மாத்திரைகளும் ஒன்றாய்ச் சேர்ந்ததின் காரணமான அந்தக் கரணத்தின் துணைக் கொண்டு, ஐந்து இந்திரியங்களினாலும் ஐந்து விதமான அனுபவங்களை அடைய முடிகின்றது.

இன்னும் அந்த பஞ்சபூதங்களின் ராஜஸ அம்சத்திலே பூதத்துக்கு ஒவ்வொரு மாத்திரையாக எடுத்துத் தனித்தனியே வைத்தது, முறையே வாய் (பேசும் சக்தி), கை (கொடுக்கல், வாங்கல் சக்தி), கால் (நடக்கும் சக்தி), எருவாய் (மலம் கழிக்கும் சக்தி), கருவாய் (இன்பம் கொடுக்கும் சக்தி) என ஐந்து செயல்களைச் செய்யக்கூடிய **"கர்மேந்திரியங்கள்"** ஆயின.

அடுத்ததாக, பஞ்ச பூதங்களின் ராஜஸ அம்சத்திலே பூதத்திற்கு தலா ஒவ்வொரு மாத்திரை எடுத்து ஒன்றாகச் சேர்த்து பிராணன், அபானன், வியானன், உதானன், சமானன் என **“ஐந்து வாயுக்கள்”** ஆயின.

பிராணன்

ஏனைய வாயுக்களுக்கு எல்லாம் தலைமையாக இருந்து, நாசிகளில் தொடங்கி அனைத்து உறுப்புகளுக்கும் உயிரூட்டும் வகையில் ரத்த ஓட்டத்தின் மூலம் பிராண வாயுவினை இருதயத்திற்கு அளித்து வருவதால் **“பிராணன்”** என்று பெயர் பெற்றது.

அபானன்

இது உண்ட உணவைச் செறிக்கச் செய்து, குதம் என்ற ஆசன வாய் பகுதியில் அபான வாயு கீழ் நோக்கிய பாய்ச்சலைக் (ஓட்டம்) கொண்டது. **“மலக்காற்று”** எனவும், **“அபானன்”** என்றும் இதற்குப் பெயர் உண்டு.

வியானன்

இதன் உற்பத்தி மூலஸ்தானமாக மண்ணீரல் விளங்குகின்றது. உணர்வு நரம்புகள் (கட்டளை நரம்புகள்) மற்றும் உணர்வுகளை எற்றிச் செல்லுதல், செயல்படுத்துதல், நரம்புகளாகவும் மற்றும் இரு நரம்புகளுக்கு இடையே வியாபகம் பெற்ற நரம்பணுக்களை கட்டுப்படுத்துவதாகவும், நரம்புகளின் கேந்திரமான மூளையை செயல்படுத்தும் (இயங்கும்) வகையில்

தொழில் புரிய வைப்பதும் **“வியானன்”** என்ற வாயு ஆகும். இதனை தொழிற்காற்றென அழைப்பர்.

உதானன்

மூச்சு மண்டலத்தின் மேல் பகுதியில் உள்ள முன் தொண்டை, மூக்கு, குரல் வளை, மூச்சுக்குழல், மூச்சின் இதர கிளை குழல்கள் ஆகிய கருவிகளின் உதவியினாலும் நாபி எனும் பகுதியில் இருந்து பிராண உந்துதலால் குரல் (சப்தம்) எழும்புவதற்கு அடிப்படை **“உதானன்”** என்ற ஒலிக்காற்று ஆகும்.

சமானன்

உடலின் அனைத்துப் பகுதிகளில் உள்ள திசுக்கள் மற்றும் மிக நுண்ணிய உடலணுக்களை வளர்க்கவும் பராமரிக்கவும் காரணியாய் உள்ளதும் பல்வேறு வகை புரதம் மற்றும் இதர தாதுக்களை உணவில் இருந்து பிரித்தல், செறித்த உணவின் மூலம் கிட்டிய சத்துக்களை உடல் முழுதும் பரவச்செய்தல் போன்ற பணிகளைச் செய்யும் வாயுவே **“சமானன்”** ஆகும். இதனை நிரவுக்காற்று (பரப்புதல், சேர்ப்பித்தல்) எனப் பெயர் பெறுகின்றது.

ஆகவே, மேலே கூறப்பட்டுள்ள ஐந்து ஞானேந்திரியங்களும், ஐந்து அந்தக்கரணங்களும், ஐந்து கர்மேந்திரியங்களும், ஐந்து வாயுக்களும் ஆக மொத்தம் இருபது தத்துவங்களும் சேர்ந்து தேவர்கள், மானிடர்கள் மிருகங்கள், போன்ற அனைத்து உயிர்களுக்கும் இவைகளே **“சூக்ஷும சரீரம்”** ஆகின்றது.

(ஆனால், கைவல்ய நவநீதம் என்ற நூலை எழுதிய ஸ்ரீ தாண்டவராய சுவாமிகள் அவர்கள் ஐந்து அந்தக்கரணங்களில் உள்ளம், சித்தம், அகங்காரம் ஆகிய மூன்று தத்துவங்களையும் மனதில் அடக்கி, மனம் மற்றும் புத்தி என அந்தக்கரணத்தை இரண்டு தத்துவங்களாக வைத்துக் கொண்டதால் இவரது கணக்குப் படி பதினேழு தத்துவங்கள் சேர்ந்து **"சூக்ஷூம சரீரம்"** என்றார்.)

இவ்வாறு, சொப்பன அவஸ்தையில் சூக்ஷ்ம சரீரத்தை நானென்று அபிமானிக்கும் ஜீவனுக்குத் **"தைஜஸன்"** என்றும், ஈஸ்வரனுக்கு **"ஹிரண்யகர்ப்பன்"** என்றும் பெயர்.

இந்த சரீரத்திற்கு பிராணமய கோசம், மனோமய கோசம், விஞ்ஞானமய கோசம் என கோசங்கள் மூன்று உள்ளது.

(பிராண வாயுவும், கர்மேந்திரியங்களும் சேர்ந்து **"பிராணமயகோசம்"** என்றும், மனமும், ஞானேந்திரியங்களும் சேர்ந்து **"மனோமயகோசம்"** என்றும், புத்தியும் ஞானேந்திரியங்களும் சேர்ந்து **"விஞ்ஞானமய கோசம்"** என்றும் அழைக்கப்படும்)

இவ்வாறு, சூக்ஷூம சரீரம் கற்பிதம் இதுவரை கூறப்பட்டது.

இனி, ஸ்தூல சரீரம் கற்பிதமும் கூறப்படும்.

ஜீவர்களுக்குத் ஸ்தூல தேகமும் (பரு உடல்), போகமும் உண்டாகும் பொருட்டு மாயா சகித ஈஸ்வரன் பஞ்சீகரிக்கப்படாத சூக்ஷ்ம பஞ்சபூதங்களைக் கற்பித்தான்.

அது எவ்வாறெனில், சத்துவ, ராஜஸ அம்சங்கள் போக மீதமுள்ள தாமஸ அம்சமான ஐந்து பூதங்களில் ஒவ்வொன்றையும் இரண்டாகப் பகுத்து, முற்பாதி ஐந்தில் ஒவ்வொரு பூதத்தையும் தனித்தனியாக எடுத்து வைத்துக் கொண்டு, இரண்டாம் பாதி ஐந்தில் தனது அம்சத்துடன் சேர்க்காமல், மற்ற நான்கு பூதங்களுடன் அரைக்கால் அரைக்கால் மாத்திரையாகக் கொடுக்க பஞ்சீகரணமாகும்.

அதாவது, ஒவ்வொரு பூதத்திலும் மற்ற நான்கு பூதங்கள் சேர்ந்து ஒவ்வொன்றும் ஐந்தைந்தாயிற்று என்பதாம்.

இப்படிப் பஞ்சீகரித்ததினால் ஸ்தூல ஆகாயமும், ஸ்தூல வாயுவும், ஸ்தூல அக்னியும், ஸ்தூல நீரும், ஸ்தூலப் பூமியும் உண்டாயின.

இப்படிப்பட்ட இந்த ஸ்தூல மகா பஞ்ச பூதங்களின் வாயிலாகவே அனைத்து ஜீவர்களின் ஸ்தூல சரீரங்களும், அண்ட சராசங்களும், அவற்றுள் ஒன்றாகிய இந்த பூமியும், இந்த பூமியில் போகங்களும் உண்டாயின.

இந்த தூல தேகத்தை **“நான்”** என்று அபிமானிக்கும் ஜீவனுக்கு **“விஸ்வன்”** என்றும், ஈஸ்வரனுக்கு **“விராட்புருஷன்”** என்றும் கூறப்படும்.

இந்த ஸ்தூல தேகமே இவ்விருவருக்கும் ஜாக்ரதா அவஸ்தையும், அன்னமய கோசமும் ஆகும்.

(உண்ணும் உணவு, மற்றும் நீர் ஆகாரங்களால் தோலும், இரத்தமும், சதையும், நரம்பும், எலும்பும், கொழுப்புமாக விருத்தி அடைந்து இருக்கின்ற இந்த ஆறு தத்துவங்களாகிய

ஸ்தூல தேகமே **“அன்னமய கோசம்”** எனப்படுகின்றது)

இவ்வாறு ஸ்தூல சரீரம் கற்பிதம் இதுவரைக் கூறப்பட்டது.

இனி ஜீவனுக்கு எப்படி மூன்று சரீரங்கள், மூன்று அவஸ்தைகள், மூன்று அபிமானங்கள் போன்ற உபாதி உண்டானதோ, அவ்வாறே ஈஸ்வரனுக்கும் மூன்று சரீரங்கள், மூன்று அவஸ்தைகள், மூன்று அபிமானங்கள் என உபாதி இருக்க, ஜீவனுக்கும், ஈஸ்வரனுக்கும் உள்ள பேதம் என்ன? என்றால், ஜீவன் காரிய உபாதி, ஈஸ்வரன் காரண உபாதி ஆகும்.

ஜீவன் தன் தேகத்தில் மாத்திரம் கலந்து நிற்கிற வியஷ்டி என்ற தனித்த சரீரத்தை உடையவன். ஈஸ்வரன் எல்லா ஸ்தூல தேகங்களையும் சேர்த்து, சமஸ்டி என்ற ஒன்றேயான தன்னுடைய ஸ்தூல தேகமாகவும், எல்லா சூக்ஷூம தேகங்களையும் சேர்த்து, ஒன்றேயான தன்னுடைய சூக்ஷூம தேகமாகவும், எல்லாக் காரண தேகங்களையும் சேர்த்து, தன்னுடைய ஒரே காரணதேகமாகவும் கொண்டு, அனைத்து பிரபஞ்சங்களிலும் கலந்து நிற்கின்ற சமஸ்டி சரீரம் உடையவன்.

ஜீவன் சிற்றறிவுள்ள கிஞ்சிக்ஞன். ஈசன் பேரறிவுள்ள சர்வக்ஞன். இன்னுமிவை போன்ற பல விசயங்களில் ஜீவனுக்கும், ஈஸ்வரனுக்கும் பெருத்த பேதம் உண்டென்று அறிக.

இதுவரை கூறிவந்த இந்த கற்பிதக் கற்பனைக் காட்சிகள் எல்லாம் ஒருவனது கனவில் காணும் காட்சிகள் போன்று பொய்யென்று சிந்தித்துத் தெளிந்தவன் எவனோ அவனே

ஞானியாவான்.

இதுவரை ஒன்றின் மீது மற்றொன்றை பொய்யாக ஏற்றிப்பார்க்கின்ற அத்தியாரோப யுக்தி முடிந்தது. இனி அபவாத யுக்தி என்ன என்பதை அறியலாம்.

காரணம், சூக்ஷுமம், ஸ்தூலம் ஆகிய மூன்று சரீரங்களும் **"சரீரத்திரயம்"** எனப்படும்.

சுழுத்தி, சொர்பனம், ஜாக்கிரம் ஆகிய மூன்று அவஸ்தைகளும் **"அவஸ்தாத்திரயம்"** எனப்படும்.

ஈஸ்வரனது காரண, சூக்ஷும, ஸ்தூல சரீர அபிமானத்தின் பெயர்கள் முறையே அந்தரியாமி, ஹிரண்யகர்ப்பன், விராட்புருஷன் எனப்படும்.

ஜீவனது காரண, சூக்ஷும, ஸ்தூல சரீர அபிமானத்தின் பெயர்கள் முறையே பிராக்ஞன், தைஜஸன், விஸ்வன் எனப்படும்.

இவைகளை **"அபிமானத் திரயம்"** எனப்படும்.

கயிற்றினைப் பாம்பாகவும் கட்டையைக் கள்வனாகவும் கண்டு மயங்கிய ஒருவனது மயக்கத்தைத் தெளிவிக்கும் பொருட்டு, மற்றொருவன் அது பாம்பல்ல கயிறு என்றும், அவன் கள்வனல்ல கட்டையென்றும், உண்மையை உணர்த்தி, அவன் மயக்கத்தை தெளிவித்தல்.

இத்துடன், பரிபூரண ஞான சொரூபியாக விளங்கும் பிரம்மத்தினிடத்தில் (கயிற்றில் பாம்புபோல்) ஏற்றி

வைக்கப்பட்ட (ஆரோபித்த) இந்த ஸ்தூல தேகத்தை **“நான்”** என்றும், இந்த ஸ்தூல பிரபஞ்சங்களை உண்மை என்றும் கருதி, மனம் மயங்கியிருக்கின்றவனுக்கு ஞானாசிரியரின் உபதேசத்தினாலும், ஞானநூல்களை கற்று விளங்கிக் கொள்வதினாலும், அவனது மன இருள் அகன்று, ஞான வெளிச்சம் உண்டாகி, **“நான்”** எனப்படுவது தேகாதி பிரபஞ்சங்கள் அல்ல, அவற்றிற்கு ஆதாரமான பஞ்சபூதங்களும் அல்ல, மேலும், ஞான சொரூபியான பிரம்மமே **“நான்”** என ஐயமறத் தெளிந்து அறிந்து கொள்வதே **“அபவாதம்”** எனப்படும்.

இந்த உண்மைக்கு ஆதாரமாக வேத சுருதிகளில் **"அது நீயாய் இருக்கிறாய்"** என்ற பொருள் பொருந்திய **"தத் துவம் அஸி"** என்னும் உபதேச வாக்கியமே சான்றாகும்.

இன்னும் மண்குடம், பொன்நகை, நூலாடை என்பவைகளில் பானையும், நகையும், ஆடையும் முறையே மண், பொன், நூல் போன்ற காரணங்களில் இருந்து உண்டான காரியங்கள் ஆகும்.

காரணமான மண், பொன், நூல் போன்றவைகளில் இருந்து உண்டாகின்ற காரியங்களுக்கு எப்படி புதியதாக பெயரும், உருவமும் கற்பிக்கப்படுகின்றதோ, அதுப்போலவே காரணமான ஈஸ்வரனிடமிருந்து தோன்றிய காரியமான இந்த பிரபஞ்சத்திற்கும் புதிய பெயரையும், உருவத்தையும் கற்பித்துக் கொள்ளப்படுகின்றது.

காரணத்தையன்றி காரியத்துக்கு கற்பித நாமரூபங்களே தவிர பொருளில்லை. ஆதலால் காரண காரியங்கள் இரண்டும் ஒன்றேயாகும்.

காரியத்தைக் காரணத்தில் அடக்கி குடத்தை மண் என்றும், நகையை பொன் என்றும், ஆடையை நூல் என்றும் பார்ப்பதுப் போல் கற்பிதமான காரண காரியங்களாய் தேகாதிப் பிரபஞ்சம் முதல் பிரம்ம சக்தியான மூலப்பிரகிருதி வரை, இரண்டாக தோன்றுமாறு ஒன்றில் ஒன்று உதித்து வெளிப்பட்ட முறைப்படியே அவைகளைத் திருப்பி, அவ்வற்றின் காரணங்களில் ஒடுக்கிக் கொண்டு போனால், கடைசியாக மிஞ்சுவது, சத்தாகிய பரப்பிரம்ம சைத்தன்யமே மெய்பொருளான மூலகாரணமென்றும், பிரம்மத்தையன்றி **"நான்"** என்ற தனியாக ஒன்றுமே இல்லை என்றும், அதுவே நானாயிருக்கிறேன் என்றும் ஐயமறத் தெளிவதே **"அபவாதம்"** ஆகும்.

சிருஷ்டிகள் ஒடுங்குமுறை எப்படி யெனில், சகல ஜீவர்களிடத்தும் தோல், உதிரம், சதை, நரம்பு, எலும்பு, கொழுப்பு என்று ஆறு தத்துவங்களாய் இருக்கிற ஸ்தூல சரீரங்கள் எல்லாம் தமக்கு ஆதாரமான ஸ்தூல பஞ்ச பூதங்களிலே கரைந்து, ஸ்தூல பஞ்ச பூதங்களாக மாத்திரமாக ஒடுங்கும்.

இந்த ஸ்தூல பஞ்ச பூதங்களும் பஞ்சீகரணம் விட்டுத் தன்மாத்திரைகளான தமோகுண பூதங்களாய் மிஞ்சும்.

சூக்ஷம சரீர தத்துவங்களான (ஐந்து அந்தக் கரணங்கள், ஐந்து ஞானேந்திரியங்கள், ஐந்து கர்மேந்திரியங்கள், ஐந்து வாயுக்கள்) இருபது தத்துவங்களும் கட்டவிழ்ந்து ஐந்து பூதங்களுடைய சத்துவ குணமும், ரஜோகுணமுமாக ஒடுங்கும்.

அது எவ்வாறெனில், சகல பிராணிகளிடத்திலும் இருக்கிற அகங்காரமும், மூக்கு என்ற இந்திரியமும், உதான வாயுவும், குறி என்ற கருவாய் இந்திரியமும், பூமியில் ஒடுங்கும்.

சித்தமும், வாய் இந்திரியமும், சமானன் என்ற வாயுவும், குதம் என்ற எருவாய் இந்திரியமும் நீரில் ஒடுங்கும்.

உள்ளமும், காது என்ற இந்திரியமும், வியானன் என்ற வாயுவும், வாக்கு என்ற வாயும் ஆகாசத்தில் ஒடுங்கும்.

அப்போது பழையபடியே முக்குண பூதங்களாகும்.

இந்தச் சூக்ஷும பூதங்களுள் மண் என்ற பூமியானது நீரில் கரைந்து ஒடுங்கும்.

நீரும், அக்னியில் புகைப்போல ஒடுங்கும், அக்னியும் விளக்கைப் போல் வாயுவில் அணைந்து ஒடுங்கும். வாயுவும் ஆகாசத்தில் ஓய்ந்து ஒடுங்கும். ஆகாயம் விக்ஷேப சக்தியில் ஒடுங்கும்.

ஆவரண சக்தியும், விக்ஷேப சக்தியும் முலப்பிரகிருதியின் தமோ குண மாத்திரமாய் மிகப் பெரிய ஆலமரம் அதன் விதையில் ஒடுங்கி இருப்பது போன்று, அடுத்த ஒரு சிருஷ்டி தோன்ற விதை போன்று மாயையில் ஒடுங்கும்.

இந்த மாயையும் அவித்தையும் அதிநுட்பமான மூலபிரகிருதி என்று கூறப்பட்ட விந்து தத்துவத்தில் ஒடுங்கும்.

இந்த விந்து தத்துவமும் பாம்பு என்ற பொய்யான பெயர் போய் கயிறு என்ற உண்மையைக் கண்டாற்போல், இரண்டற்றதாக இருக்கின்ற உண்மையான பிரம்ம சைதன்யத்தில் ஒடுங்கும்.

இப்படித் தோன்றி ஒடுங்கின தத்துவங்கள் முப்பத்தாறு ஆகும்.

அவையாவன:--

பூதங்கள் **5,**
ஸ்தூல சரீர தத்துவங்கள் **6,**
சூக்ஷ்ம சரீர தத்துவங்கள் **20,**
காரண சரீரமான மாயை, அவித்தை **2,**
இவற்றில் பிரதிபலித்த ஈசன் ஜீவன் **2,**
இவைகளுக்கு எல்லாம் அதிர்ஷ்டான சைதன்யம் பிரம்மம் **1**

ஆக மொத்த தத்துவங்கள் **36** உண்டாகின்றன.

இவைகளில் பூதங்கள் ஐந்தும், மாயை ஒன்றும், மாயாப் பிரதிபிம்ப ஈஸ்வரன் ஒன்றும், பிரம்மம் ஒன்றும் ஆக எட்டும் சகல பிராணிகளுக்கும் பொதுவாக அனுபவிக்கப்படும்.

மற்ற இருபதெட்டும் அவனவனுக்கு வேறுவேறாக அனுபவிக்கப்படும்.

அதெப்படியெனில், மண் தத்துவம் ஒன்று இல்லாவிட்டால் யாருக்கும் உணவு இல்லை. மழை இல்லாவிட்டால் எல்லோருக்கும் நீர் இல்லை. அக்னி இல்லாவிட்டால் செடி கொடிகள் இல்லை. காற்று இல்லாவிட்டால் உயிர்கள் எதுவும் இல்லை. ஆகாசம் இல்லாவிட்டால் ஒருவருக்கும் இடமில்லை.

மாயையும் மாயாப் பிரதி பிம்ப ஈஸ்வரனும் இல்லாவிட்டால் இந்த பிரபஞ்சமே இல்லை. பிரம்மம் இல்லையேல் ஒன்றுமே இல்லை.

ஆகையால், இந்த எட்டும் எல்லோருக்கும் பொதுவாக உள்ளது.

இவைகளை வெவ்வேறாக அனுபவிப்பது எப்படியெனின், ஒருவனுக்கு அவனுடைய ஸ்தூலசரீரம் (பரு உடல்) இல்லாமல் இறந்து விட்டான் என்றால் மற்றவர்கள் ஸ்தூலசரீரங்கள் இல்லாமல் போவதில்லை.

அதுப்போலவே, ஒருவனது சூக்ஷும சரீரமான மனதில் குழப்பங்கள் தோன்றி அறிவற்றவனாக இருந்தால் மற்றவர்கள் அதனால் அறிவற்ற நிலைக்குத் தள்ளப்படுவதில்லை.

அதுப்போலவே, முக்தராயிருந்த சுகர், வாமதேவர் போன்ற ஞானிகளுக்கு மனமும், அறியாமையும் இல்லாத போதும், அவர்கள் அதனால் பாதிக்கப்படுவதில்லை. இவ்வாறு, இந்த இருபத்தெட்டு தத்துவங்களும் அவனவனுக்கு வெவ்வேறு என்பதில் சந்தேகமில்லை.

இந்தத் தத்துவங்கள் முப்பத்தாறில் எப்போதும் தானாகவே காணப்படுகின்ற தத்துவம் ஒன்று. எப்போதும் தனக்கு அன்னியமாகக் காணப்படுகின்ற தத்துவம் ஏழு. தானாகவும் தனக்கு அன்னியமாகவும் அனுபவிக்கப்படுகின்ற தத்துவங்கள் இருபத்தெட்டு.

அது எவ்வாறு எனில், விழிப்பு, கனவு, ஆழ்ந்த உறக்கம் என்ற மூன்று அவஸ்தைகளுக்கு சாக்ஷியாயிருக்கிற பிரம்மசைதன்யம் அந்த அவஸ்தைகளில் தானாகவே விளங்குவதினாலும், மற்ற தத்துவங்கள் போல தனக்கு அன்னியமாக விளங்காத படியினாலும் அந்த பிரம்மசைதன்யம் ஒன்று மாத்திரம் தானாகக் காணப்படுகின்றது.

பஞ்சபூதங்கள் 5, மாயை 1, மாயா பிரதிபிம்ப ஈஸ்வரன் 1

ஆக ஏழும் இந்த ஜீவனுக்கு அந்நியமாக கருதுவதினால் **“நான்”** என்று அபிமானிக்க முடிவதில்லை.

மற்ற இருபத்தெட்டு தத்துவங்களுள் நான் பிராமணன், நான் க்ஷத்திரியன், நான் வைசியன், நான் சூத்திரன், நான் பிரமச்சாரி, நான் கிருகஸ்தன், நான் வானப்பிரஸ்தன், நான் சன்னியாசி, நான் ஆண்மகன், நான் பெண்மகள், நான் கருப்பானவன், நான் சிவப்பானவன், நான் குட்டையானவன், நான் நெட்டையானவன், நான் பருத்தவன், நான் இளைத்தவன் என்று **“நான்”** என்ற அபிமானிக்கின்ற இந்த ஸ்தூலசரீரம் சார்ந்த ஆறு தத்துவமும் மற்றொரு வேளையில், தனக்கு வேறாகக் கருதுவதினால் இது என் மாடு, என் கன்று என்றார் போல, என் சரீரம் பருத்தது, என் சரீரம் இளைத்தது, என் மயிர் நரைத்தது, என் சரீரம் பிறந்து இத்தனை நாளாயிறென்று தான் வேறு இந்த ஸ்தூல சரிரம் வேறு என்று அபிமானிக்கின்ற படியினாலும், நான் கண்டேன், நான் கேட்டேன், நான் தொட்டேன், நான் போகித்தேன், நான் கொடுத்தேன், நான் வாங்கினேன், நான் நடந்தேன், நான் புசித்தேன், நான் சிந்தித்தேன், நான் நிச்சயித்தேன், நான் இந்தப் பஞ்சத்திற்கு ஜீவித்தேன் என்று தானாக வழங்குகின்ற சூக்ஷம சரீர தத்துவங்கள் இருபதும், மற்றொரு வேளையில் தனக்கு வேறாகக் கருதுகின்ற என் விடு, என் உடமை என்றாற் போல என் கண், என் புத்தி, என் அகங்காரம், என் சித்தம், என் பிராணன் என்று தான் வேறு அவைகள் வேறாக வழங்குகின்றபடியினாலும் நான் அறிவேன், நான் அறியவில்லை என்று தானாக வழங்குகின்ற அஞ்ஞானமும், சிதாபாசனும் மற்றொரு வேளையில் என் அஞ்ஞானம், என் ஜிவன், என்று வழங்கக் கண்ட படியினாலும் இந்த இருபத்தெட்டு தத்துவங்களும் தானாகவும், தனக்கு அன்னியமாகவும் அறியப்படுகின்றது.

<u>வினா - விடை விளக்கம்</u>

வினா: இந்த இருபத்தெட்டு தத்துவங்களும் நான் என்றால் சாக்ஷியைப் போல ஒரு தன்மையாகத் தோன்ற வேண்டுமேயல்லாமல் பஞ்சபூதங்களைப் போல தனக்கு அன்னியமாகக் காண வாய்ப்பில்லை.

இந்த இருபதெட்டும் தனக்கு அன்னியமாக எப்போதும் வேறுபட்டே இருக்க வேண்டுமேயன்றி நானாக வழங்கவும் வாய்ப்பில்லை.

தானுமாய் தனக்கு அன்னியமுமாய் இருக்கும் என்பது எப்படி இருக்கின்றது என்றால் வெளிச்சமான சூரியனை, இருட்டு சூரியன் என்றும் கருதுவதுப்போல உள்ளது. இதற்கு விடை அளிக்கவும்.

விடை: பரமார்த்தமாக நான் என்கின்றது ஒருவகையும், அத்தியாசத்தினால் நான் என்கிறது ஒருவகையும் என இருவகைகளில் உண்டு.

சாக்ஷி சைதன்யத்தை **"நான்"** என்று கருதுவது பரமார்த்தம் எனலாம்.

தனக்கு அன்னியமாய் இருக்கின்ற இந்த இருபத்தெட்டையும் **"நான்"** என்கின்றது கட்டையைக் கள்ளன் என்றார் போலும்,

கயிற்றைப் பாம்பு என்றாற் போலும் மயக்கமே யல்லாமல் உண்மையல்ல.

ஆகையினால், அஞ்ஞான காலந்தொடங்கி **"நான் அல்ல"** என்று காணப்பட்ட தத்துவங்கள் ஏழு. இப்போது இப்படிப்பட்ட விசாரம் பண்ணின பிற்பாடு **"நான் அல்ல"** என்று காணப்பட்ட தத்துவங்கள் இருபத்தெட்டு.

ஆக இந்த 35 - தத்துவங்களையும் அதற்குச் சொன்ன குணங்குறிகளுடனேயும் காண்கின்ற அறிவானது (ஒரு பானையைப் பார்க்கின்றவன் அந்த பானைக்குப் வேறாகவே இருந்து பானையைப் பார்க்கின்றது போல) அவைகளுக்கு அன்னியமாகவே இருந்து அவைகளை அறிகிறதென்றும், முப்பத்தாறாந் தத்துவமாகிய அதுவே **"நான்"** என்றும், அதுவே பரசிவமென்றும் கலக்கமறத் தெளிந்தவனே சிவதரிசமுடைய **"ஜீவன் முத்தன்"** என்று சொல்லப்படுவான்.

வினா: இந்தத் தோற்றமும் ஒடுக்கமும் கூறுகிற பிரமாணமான வேத சுருதி ஏதேனும் உண்டா?

விடை: நிறைய உண்டு.

அவைகளில் ஒன்று:-- உற்பத்தி காலத்தில் பிரம்மத்தினிடமிருந்து ஆகாயமும் ஆகாயத்திலிருந்து வாயுவும் வாயுவிலிருந்து அக்கினியும் அக்கினியிலிருந்து அப்புவும் (நீர்) அப்புவிலிருந்து பிருதுவியும் (மண்) உண்டாயின என்றும், ஒடுங்கும் காலத்தில் பூமியை நீரிலும், நீரை அக்கினியிலும், அக்கினியை வாயுவிலும், வாயுவை ஆகாயத்திலும், ஆகாயத்தை அகங்காரத்திலும், அகங்காரத்தை

மகத்தத்துவத்திலும், மகத்தத்துவத்தை அவ்வியக்தத்திலும், அவ்வியக்தத்தைப் புருஷனிலும் கிரமமாக ஒடுங்கச் செய்கின்றான் என்று சுக்கிலயஜுர் வேதம் பைங்களோபநிஷத்து - வில் முறையே 1, 8 அத்தியாயங்களில் சொல்லப்பட்டு இருக்கின்றன.

வினா: மேலே சொல்லிய வேத வாக்கியங்களால் சகல பிரபஞ்சங்களும் பிரம்மமே மூலகாரண மென்று நன்கு விளங்குகின்றது.

ஆனால், காரணத்தின் தன்மையை விட்டு, வேறு தன்மையாகக் காரியம் விரியுமோ, அதனினும் வேறு மாதிரியாக விரியுமோ, அல்லது அதிலும் எதிர் மாறாக விரியுமோ என்கிற ஓர் சந்தேகம் உண்டாகிறது.

பானையில் மண்தன்மையும், துணியில் பஞ்சின் தன்மையும் இருக்கக் காண்கிறோம். மண்ணுக்கு துணியும், பஞ்சுக்கு பானையும் என வேறு மாதிரியாக மண் துணியாகாது. பஞ்சு பானையாகாது.

பிரம்மத்திலிருந்து இந்த உலகம் உதித்தது என்றால், பிரம்மத்தின் தன்மை இந்த உலகில் இருக்கக் காணோம்.

பிரம்மத்துக்கு உலகு வேறு மாதிரியாக இருக்கின்றது. அல்லது எதிர்மாறாக இருக்கின்றது.

பிரம்மம் அருவப் பொருள், உலகு உருவப் பொருள். பிரம்மம் சத்துப் பொருளாய் சதோதயமாய் விளங்குவது, உலகு முன்னுமில்லாமல் பின்னுமில்லாமல் இடையில் தோன்றுவது. பிரம்மம் சித்துப் பொருள், உலகு சடப்பொருள். பிரம்மம் ஆனந்தப் பொருள், உலகு துக்கப் பொருள். பிரம்மம் நித்தியப்

பொருள், உலகு அநித்தியப் பொருள். பிரம்மம் நிர்க்குணப் பொருள், உலகு சகுணப் பொருள். பிரம்மம் அழியாப் பொருள், உலகு அழியும் பொருள்.

இப்படிப் பல வகையிலும் தனக்கு வேறாகவும், எதிர் மாறாகவும் இருக்கின்ற இந்த உலகமாக அந்தப் பிரம்மம் விரிந்தது என்றால், இது பஞ்சாகிய காரணம் தனக்கு வேறான காரியமாக பானையாக மாறுவது போன்று உள்ளதே?

விடை: காரணம் மாறி காரியமாக மாறுவது ஒருவகையும், காரணம் மாறாமல் விகாரமடைந்து காரியமாக மாறுவது ஒருவகையும், காரணம் மாறாமலும், விகாரமடையாமலும் காரியமாக மாறுவது என ஒருவகையும் ஆக மூன்றுவகை காரண காரியங்கள் உண்டு.

விதை காரணம், மரம் காரியம். விதை மாறி மரமாக ஆகின்றது.

மண் காரணம், பானைகள் காரியம், மண் மாறாமல் விகாரமடைந்து பானைகளாகக் காரியப்பட்டது.

கானலில் தோன்றும் நீர். இதில், கானல் காரணம், நீர் காரியம். கானல் மாறாமலும், விகாரமடையாமலும் நீர் ரூபமாகக் காரியப்பட்டது.

இதில் மூன்றாவதாக கூறப்பட்டதை **“விவர்த்த காரண காரியம்”** என்று சொல்லப்படும்.

பிரம்மம் உலகமாக விரிந்ததென்றால் விதை மரமாவது போன்று அல்ல. மண் பானைகள் ஆனது போன்றுமல்ல.

பிறகு எவ்வாறு எனில், கானல் பார்ப்பதற்கு நீராகத் தோன்றுவது போன்று அறியவும்.

கானலின் தன்மைக்கு மாறாகவும், மேலும் அதன் தன்மைக்கு எதிர் மாறாகவும் அதில் நீர் கற்பிதமாய்த் தோன்றுவது போல் பிரம்மத்தின் தன்மைக்கு மாறாகவும், எதிர் மாறாகவும் பிரபஞ்சங்கள் அதில் கற்பிதமாகத் தோன்றுகின்றன.

விதை மரமானதினால் விதை தன் இயல்பிலிருந்து மாற வேண்டியதாயிற்று. மண் பானை ஆனதினால் மண் விகாரமடைய வேண்டியதாயிற்று. கானல் என்றது நீர் ஆக மாற, அங்கு எந்த மாற்றமும் நிகழவில்லை, கானலின் மீது நீரை கற்பிதமாக ஏற்றிப் பார்க்கப்படுகின்றது. அதனால், கானல் தன் இயல்பிலிருந்து மாறவோ, விகாரமடையவோ அவசியம் உண்டாகவில்லை. அது இருந்தபடி அப்படியே கானலாகவே இருக்கின்றது.

மண்ணில் பானையும், பஞ்சில் துணியும் அடங்கியிருப்பது போல் கானலில் நீர் தோற்றம் என்ற சத்தி அடங்கியிருக்கின்றது.

மண்ணில் துணி இல்லாததினால் மண் துணியாக மாறுவதில்லை. கானலில் பானைத் தோற்ற சக்தி, அல்லது துணித் தோற்ற சக்தி இல்லாததினால் கானல் பானையாகவும், துணியாகவும் தோன்றுவதில்லை.

பிரம்மத்தில் சர்வ சக்தியும் இருப்பதினால் அது சகல பிரபஞ்சங்களையும் தன்னிடத்தில் கானலில் நீர்ப்போல் கற்பிதமாகத் தோற்றுவிக்கின்றது. அந்த சக்தி பிரம்மத்தில் இருப்பதுமல்ல, இல்லாததுமல்ல. அவாந்தர சக்தி, அந்த சக்தி பிரம்மமுமல்ல, பிரமத்தையன்றி வேறுமில்லை. அது தான்

மாயாசக்தி என்று சொல்லப்படுவது. மாயை என்பது பிரம்மத்தின் சக்தியே அல்லாது அது ஓர் தனிப் பொருளல்ல.

வினா: கானலானது கண்ணுக்குப் புலப்படுகிற எதார்த்தமான உருவப் பொருளாய் இருப்பதால் அதில் கற்பிதமான நீர்ரூபம் தோன்றக்கூடும். உருவமே இல்லாமல் அருவப் பொருளாய் இருக்கின்ற பிரம்மத்தில் உருவப் பொருட்களான கற்பிதப் பிரபஞ்சம் எப்படித் தோன்றும்?

விடை: எதார்த்தமான அருவப் பொருளில் கற்பிதமான உருவப் பொருள் தோற்றுவதற்கு கனவு உலக திருஷ்டாந்தம் கூறப்படும்.

அது எவ்வாறெனில், மனமென்பது கண்ணால் காண முடியாத ஞானேந்திரியங்களுக்குப் புலப்படாத ஓர் அருவப் பொருளாய் இருக்கிறது. அந்த அருவப் பொருளான மனதில் கனவுக் காட்சிகளாக கற்பித உலகம் தோன்றுகிறதல்லவா? அதேப்போல் அருவப் பிரம்மத்தில் உருவப் பிரபஞ்சம் தோன்றுகிறது.

வினா: கனவு உலகத்தைப் பொய் தோற்றமாக அறிவது என்பது அனைவருக்கும் அனுபவமாதலால் பொருந்தும். விழிப்பு நிலையில் அவ்வாறு பொய்த் தோற்றம் என்பது பொருந்துமா?

விடை: ஏன் பொருந்தாது? கனவு நிலைப் பொருள்கள் அற்ப நேரம் அனுபவிக்கப்படுகின்றன. விழிப்பு நிலைப் பொருள்கள் அதிக காலம் அனுபவிக்கப்படுகின்றன.

கனவு உலகம் அற்ப நேரமிருந்து அழிகின்றது. விழிப்பு உலகம் அதிக காலம் இருந்து அழிகின்றது.

விழிப்பு நிலையில் எப்படியோ, அப்படியே கனவு நிலையில் உணவு உண்பதும், நீர் அருந்துவதும், அதில் கண்ட கன்னியைக் கலந்து விந்து வெளிப்படுவதும் அனுபவமே.

மொத்தத்தில் கனவுக் காட்சிகள் போன்றதுதான், இந்த விழிப்பு நிலைக் காட்சிகளும் எனலாம். ஆனால் அது சிறிது நேர கனவு. இது நீண்ட கால கனவு. இதுதான் வித்தியாசம்.

மேலும், ஸ்தூல சரீர சம்பந்தமில்லாமல், சூக்ஷும சரீரம் மட்டும் தனித்து நின்று அவசரத்தில் காணப்படுவது கனவு உலகம். ஸ்தூல சரீரமும், சூக்ஷும சரீரமும் கலந்து நிற்கும் அவசரத்தில் காணப்படுவது விழிப்பு உலகம்.

சூக்ஷும தேகத்திலிருந்து கனவு வாழ்க்கையில் அற்ப நேரம் சுக, துக்கங்களை அநுபவிப்பவனும், சூக்ஷும, ஸ்தூல தேகங்களிருந்து விழிப்பு வாழ்க்கையில் அதிக காலம் இன்ப, துன்பங்களை அநுபவிப்பவனும் ஒருவனாகவே இருக்க, அவனால் அற்ப நேரம் அனுபவிக்கப்பட்ட பொருளை பொய்த் தோற்றமென்று அறிந்துக் கொள்ள முடியும் போது, அதிக காலம் அனுபவிக்கப்பட்ட பொருளை பொய்த் தோற்றமென்று நம்ம மறுப்பது எந்த வகையில் ஞாயம் இருக்கின்றது?

ஓம் தத் சத்

பிரபஞ்ச உற்பத்தி



சுவாமி பிரபஞ்சநாதன்